<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>MCOP. No.20/2025</u>

PW : 1

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. Dr. R. லதா, M.A., M.L., Ph.D., தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. துரைசாமி | த/ பெ. | : | திரு. இரங்கசாமி |
| கிராமம் | : | கீழஞானச்சேரி | தாலுக்கா | : | குடவாசல் |
| தொழில் | : | கூலிவேலை | வயது | : | 74 |

<u>**10.04.2026**</u>

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். நான் மனுதாரர் தரப்பில் சாட்சி 1 ஆக சாட்சியமளிக்கிறேன். எனது தரப்பில் எழுத்துமூல நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் உண்மையானவை. அவை என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டது. அவை உண்மையானவை. எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) 28.07.2021 ஆம் தேதிய **முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 28.07.2021 ஆம் தேதிய **A.R.Copy நகல் ம.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) என் பேரன் **மணிகண்டனின் சடலக்கூராய்வு அறிக்கை நகல் ம.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) TN 50 AT 8584 என்ற **வாகனத்தின் MV report நகல் ம.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) TN 50 J 8831 என்ற **வாகனத்தின் MV report நகல் ம.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 26.04.2021 ந் தேதி வழங்கப்பட்ட **1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் வாகன ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) **இன்சூரன்ஸ் பாலிசி நகல் ம.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) என்னுடைய ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் ம.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) 2 ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) 3 ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) 4 ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12) 10.03.2022 ஆம் தேதி வட்டாட்சியர் வழங்கியுள்ள வாரிசு சான்று கணினி நகல் ம.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்குறுக்குவிசாரணை**

இறந்துவிட்ட எனது பேரன் மணிகண்டனின் வயது மற்றும் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பேரன் மணிகண்டன் விபத்து சமயம் இருச்சக்கர வாகனத்தின் பின்புறம் அமர்ந்து பயணம் செய்தார் என்றால் ஆமாம். அந்த இருச்சக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற நபர் வினோத் என்றால் சரிதான். அந்த வினோத் என்பவரின் வாகன ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் சாலையின் வலதுபுறம் உள்ள பெட்ரோல் பங்கில் வாகனத்திற்கு பெட்ரோல் நிரப்பிவிட்டு இருச்சக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு சாலையின் குறுக்கே வந்தார்கள் என்றால் சரியல்ல. சாலையின் குறுக்கே வரவில்லை பெட்ரோல் போட்டுக்கொண்டு வந்தபோது பின்புறம் வந்துள்ள கார் இடித்துவிட்டது. இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை.

எனது பேரனின் தலையில் அடிப்பட்ட காயத்தின் காரணமாக இறந்தார் என்றால் சரிதான். எனது பேரன் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்றால் சரியல்ல. எனது பேரன் தலைக்கவசம் அணிந்திருந்தால் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எனது பேரன் பயணம் செய்த வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரான வினோத்திற்கு விபத்து சமயம் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும், சாலை விதிகளை கடைப்பிடிக்காமல் கவனக்குறைவாகவும், அலட்சியமாகவும், அதிவேகமாகவும் இருச்சக்கர வாகனத்தை ஓட்டியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

விபத்து சமயம் அந்த இருச்சக்கர வாகனத்திற்கு காப்பீடு உள்ளதா என்றால் இருக்கிறது. வினோத் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனத்தின் உரிமையாளரையும், வினோத்தையும் காப்பீட்டுதாரரையும் இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுப்படிக்குரியது என்றால் சரியல்ல. இந்த விபத்து வினோத்தின்

கவனக்குறைவால் ஏற்பட்டதால் இவ்வழக்கின் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல.

இந்த விபத்து 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அலட்சியத்தாலும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நஷ்டஈடு பெற வேண்டி இந்த 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு எதிராக குற்ற புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரையும் இவ்வழக்கில் சேர்த்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வாரிசு சான்று ம.சா.ஆ.12 ன் படி இறந்து போன எனது பேரன் மணிகண்டனின் தகப்பனார் 3 ம் எதிர்மனுதாரர் மட்டும் தான் சட்டப்படியான வாரிசு என்றால் சரியல்ல. அவர் இறந்துவிட்டார். 3 ம் எதிர்மனுதாரருக்கான வேறு வாரிசுகளுடன் வாழ்ந்து வந்தார்கள் என்றால் என் மகள் இறந்துவிட்டார், அவரது மகனை தான் நான் வளர்த்துவந்தேன். 3 ம் எதிர்மனுதாரருக்கு வேறு வாரிசு இல்லை. அதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 3 ம் எதிர்மனுதாரர் தனியாக தான் வசித்து வந்தார் என்றால் சரிதான்.

மற்ற மனுதாரர்கள் தனிதனியாக இருக்கிறார்கள் என்றால் ஒன்றாக தான் இருக்கிறோம். மற்ற மனுதாரர்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் இல்லை. 3 மற்றும் 4 மனுதாரர்கள் திருமணமாகி தனியாக வசிக்கிறார்கள் என்றால் இல்லை. திருமணமாகவில்லை. இறந்து போன எனது பேரன் மணிகண்டனின் வருமானத்தை நம்பி மனுதாரர்கள் யாரும் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. குடும்ப அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இறந்த மணிகண்டனை நான் வளர்க்கவில்லை என்றால் சரியல்ல.

மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் இறந்த மணிகண்டன் ஓட்டுநர் வேலை செய்து ரூ.25,000/- சம்பாதிக்கவில்லை என்றாலும், நான் மனுவிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நாங்கள் சட்டப்படியான வாரிசுதாரர்கள் இல்லை என்பதாலும் மற்றும் இறந்த நபரின் வருமானத்தை சார்ந்து இருக்கவில்லை என்றாலும் இம்மனுவை தாக்கல் செய்ய எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அலட்சியத்தாலும் விபத்து ஏற்படவில்லை என்பதால் 2 எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் இல்லை என்றால் சரியல்ல. 1 மற்றும் 2

எதிர்மனுதாரர்களை பொறுத்து இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.10 04:10:13 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்